**செய்தி வெளியீடு எண் : 1689** **நாள் : 27.09.2022**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (27.09.2022) வானகரத்தில் நடைபெற்ற தென்னிந்தியத் திருச்சபையின் பவள விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.**

தென்னிந்தியத் திருச்சபையின் பவள நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு கேரள மாநில சுகாதாரத் துறை அமைச்சர் திருமதி வீனா ஜார்ஜ் அவர்களே,

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அருமை நண்பர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்களே,

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எழுச்சித் தமிழர் என்னுடைய இனிய சகோதரர் திரு. தொல். திருமாவளவன் அவர்களே,

கிறிஸ்துவ நல்லெண்ண இயக்கத்தின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான என்னுடைய பாசமிகு சகோதரர் திரு. இனிகோ இருதயராஜ் அவர்களே,

தென்னிந்தியத் திருச்சபையின் பிரதமப் பேராயர் அருட்திரு. ஏ. தர்மராஜ் ரசாலம் அவர்களே,

துணை பிரதமப் பேராயர் டாக்டர் கே. ரூபன் மார்க் அவர்களே,

பொதுச் செயலாளர் திரு. சி. பெர்ணான்டஸ் ரத்தின ராஜா அவர்களே,

பொருளாளர் டாக்டர் பி. விமல் சுகுமார் அவர்களே,

திரு. எம்மில்டன் வில்சன் அவர்களே,

சட்டமன்ற உறுப்பினர் அருமை சகோதரர் திரு.கணபதி அவர்களே,

வருகை தந்திருக்கக்கூடிய பேராயர் பெருமக்களே,

பல்வேறு மாநிலங்களிலிருந்தும், பல்வேறு நாடுகளிலிருந்தும் வருகை தந்திருக்கக்கூடிய அன்பிற்கினிய சகோதரர்களே, சகோதரிகளே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய நண்பர்களே,

தென்னிந்திய திருச்சபையைச் சார்ந்த இறை மக்களே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான மாலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தென்னிந்திய திருச்சபையின் பவளவிழாவை கடந்த ஆண்டு தொடங்கி வைத்து நான் உரையாற்றினேன். இன்றைய தினம் நிறைவு விழாவிலும் பங்கெடுக்கக்கூடிய வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன்.

நான் இல்லாமல் நீங்கள் இல்லை, நீங்கள் இல்லாமல் நான் இல்லை என்பதன் அடையாளமாக இது அமைந்திருக்கிறது.

நீங்களும் என்னை அழைக்கத் தவறுவதில்லை, நானும் உங்களுடைய அழைப்பை என்றைக்கும் மறுத்தது இல்லை என்பதன் அடையாளமாக இந்த நிகழ்ச்சி, இந்த விழா, எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த விழாவிலே, நம்முடைய கழகம், ஆட்சிப் பொறுப்பேற்று அல்லது தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற இந்த நேரத்தில், ஆற்றியிருக்கக்கூடிய பணிகளை, சாதனைகளை சிலவற்றைக் குறிப்பிட்டுக்காட்ட வேண்டும் என்ற உணர்வோடு நான் வந்தேன். ஆனால், அந்தப் பணியை எனக்கு விட்டு வைக்காமல், நம்முடைய இனிகோ இருதயராஜ் அவர்கள், அவரே முந்திக் கொண்டு அனைத்தையும், தெளிவாக, விளக்கமாக, விரிவாக உங்களிடத்தில் அவர் எடுத்து வைத்திருக்கிறார். எனவே, அதற்குள் அதிகமாக நான் செல்ல விரும்பவில்லை.

1947 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தது. அதற்கு அடுத்த மாதம் செப்டம்பர் 27 - ஆம் நாள் தென்னிந்தியத் திருச்சபை தொடங்கப்பட்டது.

தென்னிந்தியாவில் இருக்கின்ற திருச்சபைகள் அனைத்தையும் ஒன்றாக இணைத்துச் செயல்பட வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்தோடு இந்தத் திருச்சபை தொடங்கப்பட்டது.

1947 - ஆம் ஆண்டு தொடங்கப்பட்டாலும், அதற்கான முயற்சிகள் அதற்கும் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே தொடங்கி இருக்கின்றன.

- கே.டி.பால்,
- திருச்சபை ஒருமைப்பாட்டின் சிற்பி எனப் போற்றப்படும் ரெவரண்ட் அசரியா,
- வீ.சாண்டியோகா ஆகியோர் ஆரம்ப காலத்தில் இந்த முயற்சியை எடுத்துள்ளார்கள். அதாவது மொழி, நிறம், சாதி, ஏழை, பணக்காரர் என்ற பேதம் இல்லாமல், எதுவும் இல்லாததாகத் திருச்சபைகளை இணைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இதனை உருவாக்கி இருக்கிறார்கள்.

அதனால்தான் பல்வேறு மாநிலங்களில் மட்டுமல்லாமல், இலங்கையும் இணைந்ததாக இந்தத் திருச்சபை விளங்கி வருகிறது. 40 லட்சம் உறுப்பினர்களைக் கொண்ட மிகப்பெரிய திருச்சபைகளில் ஒன்றாக விளங்குவதற்குக் காரணம் இந்த ஒற்றுமை உணர்வுதான். ஒற்றுமை உணர்வுதான் நம்மை எப்போதும், என்றும் காப்பாற்றும். அதனை உணர்ந்த காரணத்தால்தான் உங்களது திருச்சபையின் குறிக்கோளாக ஒற்றுமையையே வலியுறுத்தி வருகிறீர்கள்.

“எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! - என்ற பைபிள் வாசகத்தை அடிப்படையாகக் கொண்டு”

"அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக" (That they all may be one) என்பதை முழக்கமாக வைத்திருக்கிறீர்கள்.

இதுவே அனைவரது முழக்கமாக, எண்ணமாக மாறுமானால் நாடு அமைதி தவழும் பூமியாக இப்போது மட்டுமல்ல, எப்போதும் இருக்கும் என்பதில் ஒரு துளி அளவும் சந்தேகமில்லை.

இந்தியா என்பது பல்வேறு மதத்தவர் வாழ்கின்ற நாடு. வெவ்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம். வாழ்கிறோம்.

அவரவர் மத நம்பிக்கை என்பது அவரவருக்குச் சொந்தமானதே தவிர, அடுத்தவருக்கு எதிரானதாக இருக்காது.

இயேசு கிறிஸ்துவின் போதனைகள் பெரும்பாலும் அன்பைப் போதிப்பதாகத்தான் இருக்கின்றன.

“உன்மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக” என்றுதான் இயேசு கிறிஸ்து அவர்கள் கூறுகிறார். இயேசு கிறிஸ்து இந்த மனித குலத்துக்குக் கற்றுத்தந்த மதிப்பீடுகளை வரிசைப்படுத்தினால் சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, இரக்கம், நீதி, தியாகம், பகிர்தல் ஆகியவற்றைத்தான் சொல்ல முடியும்.

மனிதர்கள் அனைவரும் சமம் என்பதுதான் சமத்துவம்.

யாரையும் வேற்றுமையாகப் பார்க்காதே என்பதுதான் சகோதரத்துவம்.

அனைவருடனும் சேர்ந்து வாழ் என்பதுதான் ஒற்றுமை.

ஏழைகள் மீது கருணை காட்டு என்பதுதான் இரக்கம்.

அநீதிக்கு எதிராக குரல் கொடு என்பதுதான் நீதி.

மற்றவர்களுக்காக வாதாடு என்பதுதான் தியாகம்.

உன்னிடம் இருப்பதை இல்லாதவருக்குக் கொடு என்பதுதான் பகிர்தல். இதைத் தான் கிறிஸ்தவம் சொல்கிறது.

இத்தகைய குணங்கள் ஒவ்வொரு மனிதருக்கும் இருந்தால் அதுதான் சமத்துவ நாடாக அமையும்.

இத்தகைய நோக்கம் கொண்ட திராவிட மாடல் ஆட்சியை நாங்கள் நடத்தி வருகிறோம். நாங்கள் நடத்தி வருகிறோம் என்றால், உங்கள் அன்போடும், ஆதரவோடும் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

எல்லாருக்கும் எல்லாம் என்பதே திராவிட மாடல் ஆட்சியினுடைய அடிப்படை நோக்கம்.

பசித்த வயிறுகளுக்கு உணவாக –

தவித்த வாய்க்குத் தண்ணீராக –

திக்கற்றவர்களுக்குத் திசையாக –

யாருமற்றவர்களுக்கு ஆறுதலாக - இருக்க நினைக்கும் அரசாக எமது அரசு செயல்பட்டு வருகிறது. மன்னிக்கவும், நமது அரசு செயல்பட்டு வருகிறது.

எமது அரசு என்பது அனைவரையும் உள்ளடக்கிய அரசுதான். இந்த அரசுக்கு அன்பும் உரிமையும் இரண்டு கண்கள்.

ஒரு கை உழைக்கவும், இன்னொரு கை உணவூட்டவுமான அரசாகச் செயல்பட்டு வருகிறோம்.

இயேசுவின் மலைப்பொழிவுச் சொற்பொழிவில் உள்ள வாக்கியங்களை இந்த நேரத்தில் சொல்வது பொருத்தமானதாக இருக்கும் என நான் நினைக்கிறேன்...

- இரக்கமுடையோர் பேறுபெற்றோர் - ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.
- துயருறுவோர் பேறுபெற்றோர் - ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்.
- கனிவுடையோர் பேறுபெற்றோர் - ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.
- ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர் - ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே.

- இப்பொழுது பட்டினியாய் இருப்போரே! நீங்கள் பேறுபெற்றோர் - ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர்கள்.

- இப்பொழுது அழுது கொண்டிருப்போரே நீங்கள் பேறுபெற்றோர் - ஏனெனில் நீங்கள் சிரித்து மகிழ்வீர்கள்!

- என்கிறது மலைப்பொழிவு.

இதனை விட தன்னம்பிக்கை ஊட்டக்கூடிய சொற்கள் இருக்கவே முடியாது. இத்தகைய தன்னம்பிக்கை ஊட்டுபவையாக இறையியல் அமைப்புகள் இயங்க வேண்டும்.

75 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் தென்னிந்தியத் திருச்சபையானது பல நூறு ஆண்டுகளைக் காணும் என்பதில் துளி அளவும் எனக்கு சந்தேகமில்லை. எத்தனை நூறு ஆண்டுகள் கடந்தாலும் மக்களுக்கு அன்பைப் போதிக்கும் ஒற்றுமையைப் போதிக்கும் அமைப்பாகவே இருக்கும் என்பதிலும் எனக்குச் சந்தேகமில்லை. தொண்டூழியம் செய்ய தங்களை அர்ப்பணித்துக் கொண்ட அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகிற்கு உப்பாய் இருங்கள்!

உலகிற்கு ஒளியாய் இருங்கள்!

இது தான் என்னுடைய அன்பான வேண்டுகோள். நம்முடைய இனிகோ இருதயராஜ் அவர்கள் இங்கே பேசுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார். உங்களைத்தான் நாங்கள் நம்பி இருக்கிறோம். உங்கள் மீது நம்பிக்கையோடு இருக்கிறோம். உங்கள் பணிகளை நீங்கள் செய்யுங்கள், நாங்கள் உங்களுக்குத் துணை நிற்கிறோம் என்கிற அந்த நம்பிக்கையை, அந்த உறுதியை இங்கே பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள். என்றைக்கும் அதில் எனக்கு சந்தேகம் இருந்ததில்லை. எப்படி எங்கள் மீது உங்களுக்கு சந்தேகம் இல்லையோ அதுபோல் உங்கள் மீதும் எங்களுக்கு என்றைக்கும் சந்தேகம் இருந்தது கிடையாது. எனவே,

எப்போதும் நாம் ஒருங்கிணைந்து இந்த நாட்டினுடைய ஜனநாயகத்தை, சமுதாயத்தை காப்பாற்றுவதற்கு சாதி, மதங்களைக் கடந்து நாம் நம்முடைய பணியைத் தொடர வேண்டும் என்கிற உறுதி எடுத்துக்கொள்ளக்கூடிய நிகழ்ச்சியாக நான் இந்த பவளவிழா நிகழ்ச்சியைக் கருதிக்கொண்டிருக்கிறேன் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இந்த சிறப்பான நல்வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கக்கூடிய நம்முடைய தென்னிந்திய திருச்சபையின் பவளவிழாவை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் குறிப்பாக இனிகோ இருதயராஜ் அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in